# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5 -ம் நாள் திங்கட்கிழமை**
**(திருவள்ளுவர் ஆண்டு, 2054, சோபகிருது வருடம், தை மாதம் 22 ம் நாள்)**
**இ.ம.எண். 2/2023 இன் மு.வ.எண். 34/2023**

முனீஸ்வரன் ... மனுதாரர்/வாதி

-எதிர்-

1. தமிழக அரசுக்காக அதன்
   மாவட்ட ஆட்சியர் அவர்கள்
   சிவகங்கை
2. வருவாய் கோட்டாச்சியர் அவர்கள்
   சிவகங்கை
3. வட்டாச்சியர், திருப்புவனம்
4. தனி வட்டாச்சியர்
   ஆதிதிராவிடர் நலத்துறை, சிவகங்கை
5. பாண்டியம்மாள்
6. சார்பதிவாளர், திருப்புவனம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 11.01.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.சுப்பராயன் அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.வீரபாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் நேரில் பார்வையிட்டு, இயற்கை அமைப்பு, உண்மைதன்மை, சொரூப நிலை ஆகியவைகளை பொறுத்து வரைபடத்துடன் கூடிய விரிவானதொரு அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாய் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்திரவிட வேண்டி மனு தாக்கல்.

**1) மனு அபிடவிட் சுருக்கம்:**

அ) தாவாசொத்தானது ஆதியில் தமிழக அரசால் ஆதிதிராவிடர் மக்களுக்கு காலனி குடியிருப்பிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, மனைப்பிரிவுகளாக ஏற்படுத்தி, மனைபிரிவு எண். 22 ஐ கடந்த 12.05.1996 ம் தேதியன்று 378/1996 என்ற எண்ணில் மனுதாரரின் தாயார் பஞ்சு (எ) பஞ்சவர்ணம் பெயருக்கு ஒப்படை ஆணையின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. பஞ்சவர்ணம் கடந்த 26.12.2015 ம் தேதி இறந்துவிட்டார். பஞ்சவர்ணத்தின் வாரிசாக மனுதாரர் திருப்புவனம் வட்டாச்சியர் அலுவலகத்தில் கடந்த 20.10.2021ம் தேதி வாரிசு சான்றும் வழங்கப்பட்டுள்ளது. தாவாசொத்திற்கு இலவச ஒப்படையாக புலஎண்.139/1பி ல் மனைப்பிரிவு எண்.22 ஐ மனுதாரர் பெயருக்கு பட்டா பெயர் மாறுதல் செய்து தரக்கோரி 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் மனு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) தாவாசொத்திற்கு சிறிதும் சம்மந்தமில்லாத 5 ம் பிரதிவாதி தாவாசொத்தினுள் அத்துமீறி அக்கிரமபிரவேசம் செய்ய முற்பட்டு வந்ததில், அதனை தடுக்கக் கோரி 1ம்

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.05 17:38:36 +0530

பிரதிவாதியிடம் மக்கள் குறைதீர் நாளில் 08.01.2022, 01.08.2022, 22.08.2022, 03.10.2022, 12.06.2023 ஆகிய தேதிகளில் மனுதாரரால் மனு செய்து, நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதி கடந்த 15.08.2022 ம் தேதி தாவாசொத்தில் மனுதாரரால் ஏற்படுத்தப்பட்டிருந்த கொட்டத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து தகரத்தால் ஆன செட் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். எனவே தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் நேரில் பார்வையிட்டு, இயற்கை அமைப்பு, உண்மைதன்மை, சொரூப நிலை ஆகியவைகளை பொறுத்து வரைபடத்துடன் கூடிய விரிவானதொரு அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாய் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) 5ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுப்புரையின் சுருக்கம்:</u>**

அ) மனு ஆட்சேபிக்கப்படுகிறது. தாவாசொத்தானது சிவகங்கை ஆதி திராவிட நல தனி வட்டாச்சியரால் ஆதி திராவிட மக்கள் வசிக்க ஒப்படைப்பு ஆணை மூலம் வழங்கப்பட்ட இடம் என்பதால் தாவாசொத்தை பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கிரையம் கொடுக்க முடியாததால், மனுதாரரின் தாயார் பஞ்சு என்பவர் கடந்த 16.03.2004ம் தேதியில் பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரம் மூலம் கிரையம் கொடுத்து அன்றைய தேதியிலேயே ஒப்படைப்பு ஆணை அசலை 5ம் எதிர்மனுதாரரிடம் ஒப்படைத்து விட்டார்.

ஆ) தாவாசொத்து விவரத்தில் உள்ள நான்குமால் விவரங்கள் தவறாக குறிப்பிட்டு, தாவாவழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாசொத்தை 5ம் எதிர்மனுதாரர் கடந்த 16.03.2004 ம் தேதியில் கிரையம் பெற்று சுமார் 19 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து குடியிருந்து வருகிறார். தற்போதைய அரசாணை எண்.34 ன் படி காலியிடமாக உள்ள புலஎண்களை அரசுப்புறம்போக்கு ஆதிதிராவிடமர் நத்தம் என்ற வகைப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளதாலும், தாவாசொத்தும் வருவாய்துறை கிராம கணக்கில் ஆதிதிராவிடர் காலனி என்று தாக்கலாகி உள்ளதாலும் தாவாஇடத்தை வருவாய்துறை ஆவணங்களின் படி அளவீடு செய்ய இயலாது. மனுவில் கோரியுள்ள வழக்குமூலம் தவறு. 5ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து சட்டகாலம் கடந்து அனுபவம் செய்து வருவதால், மனுதாரருக்கு எவ்வித வழக்குமூலமும் எழவில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3)** 1 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் மறுப்புரை தாக்கல் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**5)** அசல்வழக்கு விளம்புகை மற்றும் ஒப்படைப்பு பரிகாரம் கோரி தாக்கல் பட்டிருப்பதாகவும், 5ம் பிரதிவாதி தாவாசொத்தில் அக்கிரம பிரவேசம் செய்திருப்பதால், அதை பொறுத்து நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே மனுவை அனுமதிக்கக் கோரி மனுதாரர்தரப்பில் வாதிடப்பட்டது. 5ம் பிரதிவாதி 16.03.2004 ம் தேதியிட்டு மனுதாரரின் தாயாரிடம் கிரையம் பெற்று 20 ஆண்டுகளாக அனுபவித்து வருவதால், இவ்வழக்கின் சூழ்நிலைகளில் மனு அலைகழிவானது, தேவையற்றது என்றும் மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது.

6) அசல் வழக்கானது விளம்புகை, மற்றும் ஒப்படைப்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்தரப்பில் 12.05.1996 ம் தேதியிட்ட ந.க.எண் 378/1996 ன் படி

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.05 17:38:44 +0530

மனுதாரரின் தாயார் பஞ்சுவிற்கு ஒப்படைக்கப்பட்ட சொத்து என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. 5ம் எதிர்மனுதாரர்தரப்பில் தாவாசொத்தை மனுதாரரின் தாயார் மேற்படி பஞ்சு என்பவரிடமிருந்து 16.03.2004ம் தேதியிட்டு, கிரையம் பெற்றுள்ளதாக கூறி கட்சி செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தாவாசொத்தில் இயற்கை அமைப்பு, அடியளவுகள் குறித்த பிரச்சனை எதுவும் இல்லை. மேற்படி 16.03.2004ம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி 5ம் எதிர்மனுதாரர் வசம் தாவாசொத்து அனுபவத்தில் உள்ளதாக எதிர்மனுதாரர்தரப்பிலும், 16.08.2022ம் தேதி முதல் ஆக்கிரமிப்பு செய்து தகரசெட் ஏற்படுத்தியதாக வாதி தரப்பிலும் கட்சி செய்யப்படும் நிலையில், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது, வீண் வாய்மொழி சாட்சியங்கள் குறையக் கூடும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, வழக்கறிஞர் திருமதி.கோ.ரோகினி அவர்கள் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். அவருக்கு ஊதியமாக ரூ.3500/-ஐ (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்) மனுதாரர்/வாதி இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் நேரடியாக செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையர் உபய தரப்பிலும் அறிவிப்பு கொடுத்த பிறகு, தாவா சொத்தின் அமைப்பு குறித்தும், அளவுகள் குறித்தும் அரசு வருவாய் ஆவணங்கள் மற்றும் உபயதரப்பினரின் ஆவணங்களின் அடிப்படையில், அளந்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. அழைக்க. 06.03.2024

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 5 -ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.05 17:38:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை-

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.02.05 17:39:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.